இருக்கிறது. அந்தச் சிரமங்களைக் குறைக்க வேண்டும் என்பதற்கும் நாம் அவ்வப்போது பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். அரசு இப்போது புதிதாக ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பரிசீலித்து அமல் படுத்துகிறநேரத்தில். அதோடு தொடர்புடைய இந்தத் திட்டமும் மாண்புமிகு உறுப்பினர் எதிர்பார்ப்பது போல் சில நல்ல மாறுதல்களை அடையும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக நாம் நிர்ணயித்த தொகை 10–15 ஆண்டு காலத்திற்கு முன்பு செய்யப்பட்டது. இப்போது தாறுமாறாக விலையேறி இருக்கின்ற நேரத்தில், அப்போது நாம் ஒதுக்கிய பணத்தையே கொடுத்துக் கொண்டு வருவதால், மதிய உணவுத் திட்டத்தை சரியாக நடத்த முடியவில்லை. அதன் காரணமாகவே பல பள்ளிகளில் இந்த மதிய உணவுத் திட்டம் இன்று தோல்வியடையும் சூழ்நிலையில் இருக்கிறது. இந்த ஆண்டு நம்முடைய பட்ஜெட்டில் அதிகப் பணம் ஒதுக்கி புதிய திட்டம் ஒன்று அறிவித்துள்ளதால், இந்த மதிய உணவுத் திட்டத்தையும் பரிசீலித்து, இந்தத் திட்டத்திற்கும் கூடுதலான உதவி செய்து, எல்லாப் பள்ளிகளிலும், இந்த மதிய உணவுத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, புதிய திட்டம் 2 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்காக அறிவிக்கப் பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை இப்போது அமல் செய்ய இருப்பதால், அதனுடைய நடைமுறைகளைப் பரிசீலித்து, அதை அமல்படுத்துகிற நேரத்தில், சில மாறுதல்கள் ஏற்படும் என்று கருதுவதால், அந்த மாறுதல்களை இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு நாம் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம்.

(ஆ) சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச்சுமையினால் மூடப்படும் நிலை.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''முகவை மாவட்டம் சிவகாசி பகுதியில் உள்ள சிறு தொழில் அளவில் செய்யப்பட்டு வந்த தீப்பெட்டி தொழிலுக்கு தற்பொழுது உள்ள வரிச் சுமையின் காரணமாகப் பல தொழிற் சாலைகள் மூடப்படும் நிலை உள்ளதால் 10,000 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கும் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10–50)

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 ஏப்ரல் 2

வரிச்சுமை காரணமாக சிவகாசியில் எந்த தீப்பெட்டி நிறுவனமும் இதுவரை மூடப்படவில்லை என்றும் (எனவே தொழிளாளர்கள் யாரும் வேலையிழக்கவில்லை), ஆனால் இக்காரணத்தை முன்னிட்டு சில தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும், அவ்வாறு தொழிற்சாலைகள் மூடப்பட்டால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படலாம் என்றும் அறியப்படுகிறது. மேலும் தொழிற்சாலைகள் மூடுதல் பற்றி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர், சாத்தூர் வட்டாச்சியர் மற்றும் மத்திய ஆயத்தீர்வை அலுவலர் (Central Excise Inspecto) ஆகியோர்களுக்கு தகவல் ஏதும் இல்லை என்றும் அறியப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தபின் காப்பதை விட வரும் முன் காக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. கொக்கோ கோலா கம்பெனியை அரசு தடை செய்ததன் மூலம் பல்வேறு நகரங்களில் குளிர் பான நிறுவனங்கள் லாபகரமாகச் செயல்படுகின்றது. வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு வளர்ச்சிகள் அடைந்துள்ளது. ஆகவே அதே போன்று இயந்திரத்தால் தீப்பெட்டி செய்யப்படும் விம்கோ நிறுவனத்தைத் தடை செய்தால் குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழில் வளர்வதற்கும் வேலைவாய்ப்பு பெருகுவதற்கும் பேருதவியாக இருக்கும். எனவே விம்கோ நிறுவனத்தைத் தடை செய்ய அரசு முன்வருமா? அல்லது ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருகின்ற வகையிலே அவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி குடிசைத் தொழிலைக் காப்பாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி எல்லாம் இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டிடம் கேள்வி போட வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமக் கைத்தொழில் அமைச்சர் அவர்களுக்குத்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். ஆனால் இலாக்காவை மாற்றி இருப்பதற்கு நான் என்ன செய்ய முடியும். ஆகவே கேள்வி கேட்கிறேன். பின்னால் அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக இன்னொரு கேள்வி கேட்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிக் கேட்டால் அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கையினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு தமிழக அரசு விற்பனை வரி விலக்களிக்க உத்தேசம் உண்டா? சிற்றூர்களிலும் மற்றும் காதி கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலமும் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 1-10-1981க்கு முன்பு

1982 ஏப்ரல் 2] [திரு. இரா. தாமரைக்கனி]

இருந்த எக்ஸைஸ் ட்யூட்டியையே தற்போதும் நிர்ணயம் செய்ய நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் அவர்களே, இதுமாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடமும் சிறு தொழில் துறை அமைச்சரிடமும் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எஃபெக்ட் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் மீண்டும் ஒருமுறை இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கிராமத் தொழில் துறை அமைச்சரின் மூலமாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எஃபெக்ட் எல்லாம் நிறைய இருக்கின்றது.

5. அறிக்கை அளித்தல்.

சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார் பிலே பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மை யால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த அறிக்கை அளிக்கப்படுகின்றது. அறிக்கையின் இரு நகல்கள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேலவை விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டி இருப்பதன் காரணத்தால் அத்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவுகளைத் தள்ளி வைத்து மற்றைய அதற்கடுத்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளை வரிசையாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக இத்தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

பேரவையின் விதி 30 உள்விதி 3-ன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் திருதம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS